Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஹு மார்கழி மீ 09 உ திங்கட்கிழமை (24-12-1990) UTHAYAN — A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 28

# வில்பத்து, மணலாறு, மன்னாரில்

# பரவலாக தாக்குதல் சம்பவங்கள்!

## அதிகாரியும் 7 படையினரும் பலி!!
## கிழக்கிலும் பல இடங்களில் மோதல்

கொழும்பு, டிசம்பர் 24

வில்பத்து காட்டுப் பகுதி, மணலாறு, மன்னார் உட்பட பல இடங்களில் ஸ்ரீலங்கா படையினர் மீது விடுதலைப் புலிகள் பரவலாகத் தாக்குதல் நடத்தி இருக்கிறார்கள்.

இந்த மூன்று இடங்களிலும் இடம்பெற்ற சம்பவங்களில் இராணுவ அதிகாரி உட்பட எட்டுப் படையினர் உயிரிழந்தனர் என்று படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேசமயம் கிழக்கிலும் ஸ்ரீலங்கா படையினர் மீது தாக்குதல் முடுக்கி விடப்பட்டிருப்பதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

வடக்கிலும், கிழக்கிலும் இடம்பெற்று வரும் தாக்குதல் சம்பவங்களையும்–

படையினருக்கு அவற்றினால் ஏற்பட்டிருக்கும் இழப்புகளையும் பார்க்கும் போது ஸ்ரீலங்காப் படையினர் மீதான தாக்குதல்களை விடுதலைப் புலிகள் முடுக்கி விட்டிருப்பதாகத் தோன்றுகின்றது என சுயாதீன செய்தி ஏஜென்ஸி ஒன்று கருத்து வெளியிட்டது.

இதற்கிடையில்—

வில்பத்து வனவிலங்குப் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் உயிரிழந்ததாக பாதுகாப்புப் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதே சமயம்—

மன்னாரில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில் நான்கு இராணுவத்தினர் உயிரிழந்ததாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் இது கொண்டச்சி இராணுவ முகாமுக்கும் சுஜவத்த இராணுவ முகாமுக்கும் இடையில் கடந்த வெள்ளியன்று விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் சம்பவம் பற்றிய தகவலா என்பதை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை. [உ-எ]

## இராணுவ அதிகாரி மணலாறில் பலி!

யாழ்ப்பாணம், டிச. 24

மணலாறு - முந்திரிகைக் குளப் பகுதியில் கடந்த சனியன்று காலை 8–30 மணியளவில் - வீதியில் வந்துகொண்டிருந்த ஜீப் ஒன்றை விடுதலைப்புலிகள் வழி மறித்துத் தாக்கினர்:

அந்த ஜீப்பில் தனியாக

(2ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் 14 படையினர் பலி

கடந்த சில தினங்களாக கிழக்கில் நடைபெற்ற சண்டைகளில் 14 படையினர் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த 14 படையினரில், அதிகாரிகளும் அடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் இத் தகவலை வெளியிட்டதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன. [ஒ-எ]

### ஜே.வி.பி. சந்தேக நபர்களான

## மூன்று ஆயுதப் படையினர் பூஸாவில் சுவரேறி தப்பினர்

கொழும்பு, டிசம்பர் 24

காலியிலுள்ள பூஸா தடுப்பு முகாமில் காவலில் வைக்கப்பட்டிருந்த ஐந்து ஜே.வி.பி. தீவிரவாத சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுவிட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

சுவரேறிக் குதித்து பின்னர் முட்கம்பி வேலியூடாக இவர்கள் இரவு நேரத்தில் தப்பிச் சென்றனராம்

தப்பிச் சென்ற தீவிரவாத சந்தேக நபர்களில் மூவர், ஆயுதப் படையினர் ஆவர்.

ஜே.வி.பி. இயக்கத்துடன் நெருங்கிய தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே பிரஸ்தாப படையினர் மூவரும் கைதாகி இருந்தனர். [ஒ-எ]

## ரூ. 400 கோடி பெறுமதியான உணவுப் பொருள்கள் மோசடி!

அரச உணவுக் களஞ்சியங்களில் பெரும் மோசடி இடம்பெற்றுள்ளது இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அரிசி, சீனி போன்ற அத்தியாவசியப் பொருள்கள் கையாடப்பட்டுள்ளது அம்பலத்துக்கு வந்துள்ளது.

400 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியான இந்த பெரும் மோசடி குறித்து தற்பொழுது விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்று உணவுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன,

இது தொடர்பாக ஏற்கனவே 80 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த மோசடியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் மேலும் பலரைப் பொலீஸார் தேடி வருகின்றனர். விரைவில் மேலும் 50 பேர் வரையில் கைது செய்யப்படலாம் என்று பொலீஸ் வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன. (ஒ-எ)

## போர்நிறுத்தம் செய்ய ஆயர் மன்றம் கோரிக்கை

கொழும்பு, டிச. 24

இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் போர் நிறுத்தம் செய்து பேச்சுவார்த்தையைத் தொடக்க வேண்டும்.

இலங்கையின் கத்தோலிக்கத் திருச்சபை ஆயர் பேரவை முன்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இரு தரப்பினரும் மோதல்களைக் கைவிட்டு பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வர வேண்டும் என்று இலங்கைக் கத்தோலிக்க ஆயர்கள் பேரவை தனது கிறிஸ்மஸ் செய்தி மூலம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்று தாம் நம்புவதாகவும் ஆயர்கள் அச் செய்தியில் குறிப்பிட்டுள்ளனர். [அ-எ]

### யாழ். மாவட்ட மக்கள் அவசரமாக

## வெளி மாவட்டங்களுடன் தொடர்புகொள்ள 'வயர்லஸ்'

யாழ். மாவட்ட மக்கள் அவசரத் தேவைகளுக்கு-பிற மாவட்டங்களுடன் தொடர்பு கொள்ள உதவும் வகையில் இங்கு 'வயர்லஸ்' வசதியை ஏற்படுத்திக்கொடுக்க பிரிட்டனின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் முன்வந்துள்ளது.

கொழும்பில் இருந்து இந்த அமைப்பின் அதிகாரிகள் சிலர் இங்கு வந்து இதற்கான வேலைகளில் ஈடுபடவுள்ளனர்.

யாழ். மாவட்ட மக்கள் தொலைத்தொடர்பு மற்றும் போக்குவரத்து வசதிகள் இல்லாது அவலப்படுவதை அடுத்தே இந்த ஏற்பாட்டைச் சிறுவர் பாதுகாப்பு நிதியம் மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## குண்டினால் தகர்க்கப்பட்ட படகு பாலைதீவு கடலிலிருந்து மீட்பு!

### அதில் சென்ற 3 மீனவர் கதி தெரியவில்லை

குருநகர், டிச. 24

குருநகரைச் சேர்ந்த மூன்று மீனவர்களுடன் கடந்த மாதம் 30 ஆம் திகதி குடாக் கடலில் காணாமற்போன படகு, முற்றாகச் சேதமுற்ற நிலையில் கண்டுபிடிக்கப்பட்டு, மீட்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப 'பிளாஸ்ரிக்' படகை கடற்படையினர் குண்டு வைத்துத் தகர்த்துவிட்டு, கைவிட்டு சென்றிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

அதற்கான அடையாளங்கள் [illegible] காணப்பட்டது [illegible] கப்பட்டது.

அந்தப் படகில் சென்ற மீனவர்கள் மூவருக்கும் என்ன நடந்தது என்பது இன்னும் மர்மமாகவே இருக்கிறது.

குருநகரைச் சேர்ந்த இராசதுரை கனகு [52 வயது], டேவிட் ரமேஷ் [25 வயது], தம்பித்துரை பொன்ராசா [18 வயது] ஆகியோரே அந்த மூவரும் ஆவர்.

இவர்கள் மூவரும் கடலில் [illegible] காணாமற்போன செய்தி ஏற்கனவே உதயனில் வெளியாகி இருந்தது தெரிந்ததே. [ஒ-51]

## திருமலை சென்ற "லங்காசிறி" கப்பல் மீண்டும் வந்தது!

யாழ்ப்பாணம், டிச. 24

சீரற்ற நிலையை அடுத்து-பருத்தித்துறையில் இருந்து-திருகோணமலைக்குத் திரும்பிச் சென்றிருந்த 'லங்காசிறி' கப்பல் மீண்டும் நேற்று பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தது.

யாழ். அரச அதிபர் நேற்று பருத்தித்துறைக்குச் சென்று நிலைமைகளை நேரில் அவதானித்தார்.

கப்பலில் இருந்து பொருள்களை உடனடியாக இறக்குவதற்கான ஏற்பாடுகளை அவர் மேற்கொண்டிருந்தார். (ஒ-3)

## பாண்டிருப்பில் 40 தமிழர் கைது!

யாழ்ப்பாணம், டிச. 24

மட்டக்களப்பு மாவட்டம் பாண்டிருப்பில் நேற்று படையினர் மேற்கொண்ட தேடுதலின்போது 40 தமிழ்ப் பொது மக்கள் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. [ஒ-3]

## தமிழர்கள் படும் அவலம் பாப்பரசரின் சமூகத்திற்கு!

யாழ்ப்பாணம், டிச. 24

தமிழ் பகுதிகளில் இடம்பெற்று வரும் இராணுவ நடவடிக்கைகளால் மக்கள் அனுபவிக்கும் அவலங்கள், இன்னல்கள், துயரங்கள் குறித்து பரிசுத்த பாப்பரசர் அருளப்பர் சின்னப்பருக்கு எடுத்துக் கூறப்பட உள்ளது,

தமிழ் மக்கள் படும் இன்னல்களை பாப்பரசரின் கவனத்துக்குக் கொண்டு வருவதாக, இலங்கையில் உள்ள பாப்பரசரின் பிரதிநிதியான ஆயர் பிரான்சுவா பக்கே உறுதி அளித்திருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில், நகரின் பிரபல தேவாலயம் ஒன்றின் பங்குத் தந்தை அண்மையில் கொழும்பு சென்று பாப்பரசரின் பிரதிநிதியை நேரில் சந்தித்தார்.

அவர் தனிப்பட்ட முறை

[2 ஆம் பக்கம் பார்க்க]

## மக்களை இரவு நேரத்தில் கூவி பயமுறுத்திய ஷெல்கள்!

யாழ்ப்பாணம், டிச. 24

பலாலி, கட்டுவன் முகாம்களில் இருந்து நேற்று முன்தினம் இரவு இலக்கின்றி அடுத்தடுத்து ஏவப்பட்ட பல ஷெல் குண்டுகள் யாழ் நகரையும் அதை அண்டிய பகுதிகளிலும் பெரும் சத்தத்துடன் விழுந்து வெடித்ததால் நகர மக்கள் அல்லோலகல்லோலப்பட்டனர்.

இந்த ஷெல்களினால் இருவர் காயமுற்றனர். பத்துக்கும் அதிகமான வீடுகள் சேதமுற்றன. கால்நடைகளும்

[2 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாண்டிச்சேரி தி.மு.க. அரசு இன்று பதவி இழக்கும்?

பாண்டிச்சேரி, டிச. 24
பாண்டிச்சேரி யூனியன் பிரதேச தி.மு.க. அரசு கவிழுவது பெரும்பாலும் நிச்சயமாகிவிட்டது என்று கூறப்படுகிறது.

தி.மு.க. அரசை ஆளுநர் இன்று பதவி நீக்கம் செய்வார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

தி.மு.க. அரசு தனது பெரும்பான்மையை இழந்துவிட்டது என்றும் அவர் நேற்றுச் சொன்னார்.

முப்பது பேர் கொண்ட சட்டசபையில் அரசுக்கு எதிராக 16 உறுப்பினர்கள் இருப்பது தெளிவாக தெரிந்த போதிலும், முதலமைச்சர் டி. இராமச்சந்திரன் தனது அரசுக்குள்ள பெரும்பான்மையை நிரூபிக்க இன்று [திங்கள்] பிற்பகல் 3 மணிவரை தாம் கால அவகாசம் வழங்கியிருப்பதாக ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

பெரும்பான்மையை நிரூபிக்க சட்டசபையைக் கூட்ட வேண்டும் என்று முதலமைச்சர் டி. இராமச்சந்திரன் விடுத்த கோரிக்கையை, ஆளுநர் நிராகரித்து விட்டார். [உ-எ]

## செருக்கன் நோக்கி ஷெல் தாக்குதல்

நேற்று முன்தினம் பிற்பகல் செருக்கன், நாரந்தனைப் பகுதிகளை நோக்கி ஊர்காவற்றுறை இராணுவத்தினர் ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

இப்பகுதியில் இருந்து அனேகமானோர் இடம்பெயர்ந்து விட்டதால், உயிரிழப்புகள் ஏற்படவில்லை. (ஒ 125)

## மரண அறிவித்தல்கள்

### பூதத்தம்பி குலராஜசிங்கம்
(குலம் மாஸ்டர்)

சாவகச்சேரியைச் சேர்ந்த (இளைப்பாறிய ஆசிரியர்) பூதத்தம்பி குலராஜசிங்கம் 18-12-90 செவ்வாய்க்கிழமை இறைமைக்குள் பிரவேசித்துவிட்டார். அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை 24-12-90 திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இதனை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மாலா தேவகுமாரன்
புகையிரத நிலைய வீதி,
சாவகச்சேரி. (14874)

### திரு. கதிரவேலு நல்லையா

இளைப்பாறிய திரு. கதிரவேலு நல்லையா [மாங்கன்று நல்லையா] 22-12-90 இல் காலமானார்.

அன்னாரின் ஈமச்சடங்கு பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. கணேசலிங்கம்
சோணாவளை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (14872)

### திருமதி நாகலிங்கம் விசாலாட்சி
புங்குடுதீவு

திருமதி நாகலிங்கம் விசாலாட்சி காலமானார். இவர் காலஞ்சென்ற நாகலிங்கத்தின் அன்பு மனைவியும், திருமதி புவனேஸ்வரி, திரு. சிவபாதன், காலஞ்சென்ற சொர்ணலிங்கம் ஆகியோரின் அருமைத் தாயாரும், நீ. வ. நவரெத்தினம், நவமணி, பதுமநிதி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற அன்னப்பிள்ளை, காலஞ்சென்ற சிவக்கொழுந்து, காலஞ்சென்ற இராசம்மா, சரவணமுத்துச்சுவாமி [திருக்கேதீஸ்வரம்] ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [24-12-90] திங்கள் நண்பகல் 12-00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் மணற்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
புலவர் ஈழத்துச் சிவானந்தன்
[பேரன்]
புங்குடுதீவு - 11. (14873)

### திருமதி தனலட்சுமி சோமசுந்தரம்

கல்வளை சண்டிலிப்பாயைச் சேர்ந்த திருமதி தனலட்சுமி சோமசுந்தரம் 22-12-90 அன்று கொழும்பில் காலமானார். இவர் தம்பிப்பிள்ளை சோமசுந்தரம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், ரவிராஜ் (டென்மார்க்), சித்திரா (கனடா), கௌரி, குகராஜ், ஜமுனா ஆகியோரின் அன்புத் தாயாரும், பயில்வண்ணனின் (கனடா) அன்பு மாமியாரும், காலஞ்சென்ற திரு, திருமதி நமசிவாயத்தின் அன்பு மகளும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 23-12-90 நேற்று கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெற்றன என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

கல்வளை,
சண்டிலிப்பாய். (15274)

## யாழ். ஆஸ்பத்திரியின் திருத்த வேலைக்கு ஒதுக்கப்பட்ட பணம் நேற்றுடன் முடிந்தது!

யாழ்ப்பாணம், டிச. 24
யாழ். போதனா ஆஸ்பத்திரியில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டட திருத்த வேலைகளுக்கு என ஒதுக்கப்பட்ட பணம் நேற்றுடன் முடிவடைந்துவிட்டது.

யாழ். போதனா ஆஸ்பத்திரியின் கட்டட திருத்த வேலைகளுக்கென 1990 ஆம் ஆண்டு முழுவதுக்குமென முன்னர் 30 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் 20 லட்சம் ரூபா ஜூன் மாதத்துக்கு முன்னரே பாவிக்கப்பட்டுவிட்டது.

10 லட்சம் ரூபா மட்டுமே எஞ்சியிருந்தது. இந்த நிலையில் ஜூன் மாதம் முதல் இடம்பெற்ற இராணுவத் தாக்குதல்களால் ஆஸ்பத்திரி பெரும் சேதமுற்றதையடுத்து அதற்கென மேலதிகமாக 10 லட்சம் ரூபாவை சுகாதார அமைச்சு ஒதுக்கீடு செய்திருந்தது.

மொத்தத்தில் தற்போது நடைபெற்ற திருத்த வேலைகளுக்கென 20 லட்சம் ரூபாவே செலவிடப்பட்டுள்ளது. ஆனால், சேதமோ அதிகம்.

இதுவரை திருத்த வேலைகளில் 50 சதவீதமே செய்து முடிக்கப்பட்டுள்ளதாகவும் - இனி அடுத்த நிதி ஆண்டில் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்னரே தொடர்ந்தும் திருத்தவேலைகளைச் செய்ய முடியும் என்றும் - சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். [அ-6]

## சங்கீத சபை பரீட்சை ஏப்ரலில்

யாழ்ப்பாணம், டிச. 24
1991 ஆம் ஆண்டுக்கான வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சைகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி தொடக்கம் நடைபெற இருப்பதாக வட பிராந்திய கல்விப் பணிப்பாளரும் வட இலங்கை சங்கீதசபைத் தலைவருமான திரு. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

தேர்வுக்கான விண்ணப்பங்கள் பெப்ரவரி முதலாம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும். [ஒ-6]

## இன்று பரீட்சை

யாழ்ப்பாணம், டிச. 24
சர்வதேச சென் ஜோண் அம்புலன்ஸின் இலங்கைக் கிளையினால் நல்லூர் படை அத்தியட்சர் பிரிவுகளுக்கான முதலுதவிப் பரீட்சைகள் இன்று காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன. [ஒ-5]

## போராளிகள் என்ற பெயரில் அப்பாவித் தமிழரே கைது!
### ஜெயலலிதா நேற்று கண்டன அறிக்கை

சென்னை, டிச. 24
இலங்கைத் தமிழ்ப் போராளிகள் என்ற பெயரில் காயமடைந்தவர்களும் அப்பாவித் தமிழர்களுமே கைது செய்யப்படுகின்றனர்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் முன்கண்டவாறு கண்டனம் தெரிவித்துள்ளார்.

தமிழ் நாட்டில் வேதாரண்யம் தொடக்கம் இராமேஸ்வரம் வரையான கரையோரப் பகுதிகள் மாநில அரசின் கட்டுப்பாட்டில் இல்லை.

தமிழகத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினரின் நடமாட்டம் இல்லை என்று கூறிய முதலமைச்சர் கருணாநிதியின் அரசு, இன்று தினமும் போராளிகளைக் கைது செய்து வருவதாகக் கூறுவது ஒரு கண்துடைப்பாகும் - என்று அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஒ-எ]

## ஈராக்கை மிரட்டுகிறார் பிரிட்டிஷ் பிரதமர் மேஜர்!

ஐ. நா. வின் காலக்கெடுவுக்கு முன்னர் குவைத்தில் இருந்து ஈராக்கிய படைகள் வெளியேறாவிட்டால், இராணுவ பலத்தை ஈராக் மீது பாவிக்க அமெரிக்காவும் பிரிட்டனும் தயாராக இருக்கின்றன.

பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் செய்தியாளர்களிடம் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுடன் வாஷிங்டனில் பேச்சுக்கள் நடத்திய பின்னர் திரு. மேஜர் இந்த மிரட்டலை விடுத்தார்.

பிரிட்டிஷ் பிரதமரான பின்னர் திரு. ஜோன் மேஜர் அமெரிக்காவுக்கு விஜயம் செய்தது இதுவே முதல் தடவையாகும். [ஒ-எ]

## இரசாயன ஆயுதங்களை பாவிக்க ஈராக் தயங்காது!
### சதாம் பதிலுக்கு எச்சரிக்கிறார்

அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படைகள் போர் தொடுக்கும் பட்சத்தில் அவற்றுக்கு எதிராக இரசாயன ஆயுதங்களைப் பாவிக்கப் போவதாக ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் எச்சரித்தார்.

ஈராக்கிடம் பத்து லட்சம் படையினர் உள்ளனர். அவர்களிடம் அணு ஆயுதங்கள் இல்லாவிடினும், பெருமளவில் இரசாயன ஆயுதங்கள் இருப்பதாகவும் ஜனாதிபதி ஹுசேன் சொன்னார்.

இது பற்றி அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டிக் சேனி கருத்து வெளியிடுகையில்—

"ஈராக் ஜனாதிபதியின் பேச்சு, அவர் தம்மை எதிர்நோக்கும் ஆபத்து பற்றி இன்னும் உணராதவராக [illegible] என்பதையே எடுத்துக் காட்டுகிறது" - என்று சொன்னார். [ஒ-எ]

## சுருவிலில் கசிப்பு வேட்டை

புளியங்கூடல், டிச. 24
சுருவிலில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த இருவர் வேலணைப் பிரதேச விடுதலைப் [illegible] னணியினரால் கைது செய்யப்பட்டனர்.

## சவூதியில் படையினருடன் சார்ள்ஸ்!

ரியாத், டிச. 24
பிரிட்டிஷ் முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸ் சவூதி அரேபியாவில் நிலை கொண்டுள்ள பிரிட்டிஷ் படையினரைச் சென்று பார்வையிட்டார்.

'சேர்ச்சில்' என்ற பெயர் கொண்ட பிரிட்டிஷ் பீரங்கி வண்டி ஒன்றில் சென்று படையினரின் நடவடிக்கைகளை சார்ள்ஸ் பார்வையிட்டார் (ஒ-எ)

## ஓடாதே! கொழும்புக்கு ஓடாதே!!

யாழ்ப்பாணம், டிச 24
நேற்று இடம்பெற்ற மாணவர் எழுச்சி ஊர்வலத்தில் தாங்கிச் செல்லப்பட்ட சுலோகங்களில் காணப்பட்ட வாசகங்களில் சில வருமாறு:-

★ தேசப்பற்றை ஊட்டாத கல்வி; தேவைக்கு உதவாத கல்வி!
★ குண்டு வீச்சால் குழப்பமடைய மாட்டோம்; குருதி சிந்தத் தயாராகி விட்டோம்!
★ ஓடாதே! ஓடாதே!! கொழும்புக்கு ஓடாதே!!!
★ மாணவர் சக்தி மகத்தான சக்தி!
★ மாணவர் உரிமையை ஒடுக்காதே!, [ஒ-5]

## மாணவரின் உணர்வுபூர்வ எழுச்சி ஊர்வலங்கள்

யாழ்ப்பாணம், டிச 24
விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் முன்னாள் பொறுப்பாளரான மேஜர் முரளியின் ஞாபகார்த்தமாக நேற்றுமாலை எழுச்சி ஊர்வலங்கள் இடம்பெற்றன.

நேற்றுமாலை 4 மணியளவில் கொக்குவில் இந்துக்கல்லூரியில்இருந்து ஆரம்பமான - வலிகாமம்பகுதி பாடசாலை மாணவர்களது - ஊர்வலமும்—

நல்லூர் சாதனா பாடசாலையில் இருந்து மாலை 4-30 மணியளவில் ஆரம்பமான - தென்மராட்சிப்பகுதிப் பாடசாலை மாணவர்களினது - ஊர்வலமும் உரும்பராயை வந்தடைந்தன,

ஆயிரக்கணக்கான மாணவர்கள் இந்த ஊர்வலங்களில் உணர்வுபூர்வமாகக் கலந்து கொண்டனர்.

இறுதியில் உரும்பராயில பொதுக்கூட்டமும் நடைபெற்றது.

இந்தியப் படையுடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த மேஜர் முரளி, கப்டன் காந்தி, லெப். தர்ஷினி, நிர்மலா, பஞ்சன், அமுதன்: சதா, நிகிந்தா, நிரா, நிதி ஆகியோரது நினைவாக உரும்பராய்-கோப்பாய் வீதியில் நினைவுக் கல்வெட்டுகளும் திரைநீக்கம் செய்யப்பட்டன. (ஒ 3-5)

## மக்களை. .
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இறந்தன.

குருநகர், கச்சேரிப் பகுதி, நாவாந்துறை, மண்டைதீவு, கல்லுண்டாய் வெளி, கட்டுடை ஆகிய பகுதிகளில் — பரவலாக பல இடங்களில் — இந்த ஷெல்கள் விழுந்து வெடித்தன.

காற்றைக் கூவிக் கிழித்துக் கொண்டு - 'ஸ்......ஸ்' என்ற சத்தத்துடன் சென்ற— இந்த ஷெல்களினால் பலாலிக்கும் யாழ் நகரப் பகுதிக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் இருந்த மக்களும் பீதியடைந்தனர்.

நேற்று முன்தினம் இரவு 8 மணி முதல் நேற்று அதிகாலை 3 மணி வரை விட்டு, விட்டு ஷெல் குண்டுகள் நகரப் பக்கமாக ஏவிவிடப்பட்டன.

சில ஷெல் குண்டுகள் நகருக்கு அப்பால் சென்று கடல் பகுதிகளிலும் விழுந்துவெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3-51)

## இராணுவ.
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வந்து கொண்டிருந்த இராணுவ அதிகாரி ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். ஜீப்பும் பலத்த சேதமுற்றது.

மணல்ஆறுப் பகுதியில் இராணுவ அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டதை ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்களும் ஒப்புக்கொண்டன.

உயிரிழந்த இராணுவ அதிகாரியிடமிருந்த பிறவுணிங் பிஸ்டல் ஒன்று, அதற்குரிய இரு மகஸின்கள், 9 எம்.எம். ரவைகள் - 28 ஆகியவை தங்களால் மீட்கப்பட்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன, (உ)

## எம்.ஜி.ஆர். நினைவு நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், டிச. 24
தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும், புரட்சி நடிகருமான திரு. எம். ஜி. ராமச்சந்திரனின் 3 ஆவது ஆண்டு நிறைவையொட்டி இன்று விசேட நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குருநகர், பாஷையூர் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள எம். ஜி. ஆர் சிலைகளுக்கு இன்று காலை 9 மணிக்கு மலரஞ்சலி செலுத்தப்படும்.

மாலை 4 மணிக்கு குளப்பிட்டி வீதியில் உள்ள ஸ்ரீ காளியம்மன் சன சமூக நிலையத்துக்கு முன்பாக அஞ்சலிக் கூட்டம் ஒன்றும் நடைபெற இருக்கிறது. (ஒ-3)

## தமிழர்கள் படும்.--
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யிலேயே ஆயர் பிரான்சுவா பக்கேயை சந்தித்தார். எவினும் தமிழ்ப் பகுதிகளில் மக்கள் படும் அவலங்களை பாப்பரசரின் திருச்சமுகத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

வடபகுதியில் தாம் நேரில் பார்த்த பல பாதிப்புகளையும், அவலங்களையும் பங்குத்தந்தை பாப்பரசர் பிரதிநிதியிடம் விவரமாக எடுத்துரைத்தார்.

இப்பகுதி மக்களின் அவலங்களையும், துன்பங்களையும் பாப்பரசரிடம் தாம் நேரில் எடுத்துச் சொல்வதாக ஆயர் பிரான்சுவா, பங்குத்தந்தையிடம் உறுதி அளித்திருக்கிறார். (அ 6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### கோர்பச்சேவ்

சோவியத் ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சர் எட்வேர்ட் ஷெவர்நாட்ஸேயின் ராஜினாமா ஆட்சி உட்பூசலைப் பிரதிபலிக்கிறது.

அதிபர் கோர்பச்சேவின் புதிய அரசியல் சித்தாந்தமும், கொள்கைகளும் உலகத்தில் சர்வதேச ரீதியிலான பல அரசியல் மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளன; சர்வதேச மட்டத்தில் அவரை ஒரு சரித்திர நாயகனாக்கி உயர்த்திவிட்டன.

ஆனால் அதிபர் கோர்பச்சேவ் தமது சொந்த நாட்டில் ஆதரவும், செல்வாக்கும் இழந்து வருகிறார். அந்நாட்டு மக்களின் எதிர்ப்புகளையும், எழுச்சிகளையும் எதிர்நோக்க வேண்டிய கஷ்டநிலை ஏற்பட்டுள்ளது. அவரது புதிய கொள்கைகளும், திட்டங்களும் நாட்டில் பெரும் பொருளாதாரச் சீர்கேடுகளை உருவாக்கி உள்ளன. பஞ்சம், பட்டினி உண்டாகும் அளவுக்குக் கீழ்நோக்கிப் போய்விட்டது.

மக்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் உட்பட ஏனைய பாவனைப் பொருள்கள் சந்தைக்கும், மக்களின் உணவு மேசைக்கும் கிடைக்கக்கூடிய ஒரு வழிமுறையை உண்டாக்குவதில் ''பெரெஸ்ரொய்க்கா'' தோல்வி கண்டு விட்டது. விநியோக மார்க்கங்கள் மூடப்பட்டு விட்டதால் உணவுப் பொருள்களை அரசாங்கத்துக்கு விற்பதற்குப் பதிலாக, தொழிற்சாலைகளுடன் பண்டமாற்றுச் செய்வதற்கு விவசாயிகள் தொடங்கி விட்டார்கள். கடைகள் வெறிச்சோடிக் கிடக்கின்றன.

பொருளாதாரத் துறையில் மக்கள் பட்டினி கிடக்கும் அளவுக்கு நிலைமை சீர்கெட்டுள்ளது போலவே, சோவியத் கூட்டமைப்பின் அரசியல் தளமும் ஆட்டங் கண்டுள்ளது. கூட்டமைப்பின் 15 குடியரசுகள் தமக்கு கூடுதல் சுயாட்சி வேண்டும் அல்லது தாம் பிரிந்துபோகப் போவதாக கோர்பச்சேவை அச்சுறுத்தி உள்ளன. பிராந்திய மற்றும் உள்ளூராட்சி அரசுகள் தங்கள் பகுதிச் சொந்தப் பிரஜைகளின் நலன்களைக் கவனிப்பதற்கு முன்னுரிமை கொடுக்கத் தொடங்கி விட்டன.

இராணுவத்திலும் அதிபர் கோர்பசச்சேவுக்கு ஆதரவு குறைந்து வருகிறது. கடந்த நவம்பர் நடுப் பகுதியில் இராணுவ அதிகாரிகள் மத்தியில் அவர் உரையாற்றச் சென்றபோது, அவருக்கு எதிராகக் கூச்சலிட்டு கோஷமிடப்பட்டது! 22 அறிஞர்களைக் கொண்ட குழுவும், '' தீர்க்கமாகச் செயற்படு இல்லையேல் இராஜினாமாச் செய் '' என்று அவரைப் பகிரங்கமாகக் கேட்டிருந்தது.

மொத்தத்தில் கடந்த பத்து மாதங்களில் கோர்பச்சேவின் பிரபல்யத்தன்மையும், ஆதரவும் 52 சத வீதத்திலிருந்து 21க்கு வீழ்ச்சி அடைந்துவிட்டதாக இந்த மாதத்தில் எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பு எடுத்துக் காட்டுகிறது.

உலகத்துக்கு நல்லவனாக, சீர்திருத்தவாதியாகத் தெரியும் கோர்பச்சேவ், தனது சொந்த நாட்டில் அரசியல், பொருளாதாரச் சீர்குலைவுகளை ஏற்படுத்திய வீற்போக்காளனாகக் கருதப்படுகிறார்! அவரது தலைமைத்துவம் ஒரு பக்கத்தில் துலக்கமாக மின்னும் அதேவேளை அடுத்த பக்கத்தில் இருள் மண்டி ஒளி மங்குகிறது.

## ஆஸ்பத்திரி ஊழியருக்கு விசேட பஸ் சேவை

யாழ் போதனாவைத்திய சாலையில் கடமை புரியும், வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளைச் சேர்ந்த ஊழியர்கள் கடமைக்கு சென்று வருவதற்கு வசதியாக வைத்தியசாலை நிர்வாகம் இன்று திங்கள் முதல் பஸ் சேவை ஒன்றை ஒழுங்கு செய்துள்ளது.

இந்தச் சேவையில் இரண்டு பஸ்கள் சேவையாற்றும் எனவும், பருத்தித்துறையிலிருந்து காலை 7 மணிக்கு ஒரு பஸ்ஸும், சாவகச்சேரியில் இருந்துகாலை 7.00 மணிக்கு மற்றுமொரு பஸ்ஸூ புறப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

போக்குவரத்துச் சேவைகள் சீரடையும் வரை தொடர்ந்து தினமும் இச்சேவை இடம்பெறும். (இ-15)

## பௌதிக விஞ்ஞான பரீட்சை முடிவுகள்

இரண்டாம் ஆண்டு பௌதிக — விஞ்ஞானப் பரீட்சையில் சித்தியடைந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்களில் 35 பேரின் பெயர்கள் கடந்த 19 ஆம் திகதி உதயனில் வெளிவந்தன.

சித்தி அடைந்த ஏனையோர் விவரம் வருமாறு:-

எஸ். மனோகரன், செல்வி என். எமல்டா, செல்வி பி. பகீரதி. எஸ். ராஜசேகர், செல்வி ஆர். எம். இராஜேந்திரம், ரி. சத்தியசீலன், வி. சிவபாலன், செல்வி ஜே. சுதர்சனா, பி. தேவநாதன், கே. எம். வித்தியானந்தநேசன், ஜி. சபேசன்,

எஸ். சிவரவின், எஸ். கிருபாசரன், எம். மணிசேகரன், செல்வி எஸ் சிவமதி, ரி. ஏ. ஜே. இன்பராஜா, எஸ், இலட்சுமணன், எம். ஆனந்தநடராஜா, ஏ. நித்தியானந்தன், எஸ் எஸ். பாஸ்கரன், செல்வி எஸ். சிந்தாதேவி, கே. எஸ். ராஜ்குமார், எஸ். பி. ஈ. உதயகுமாரன், செல்வி கே. கிருபா, எஸ். ராஜசூரியர், என். சபாநாயகம், செல்வி ஜி. சியாமளா,

செல்வி பி. சுனிதகலா, ஆர். வரதராஜன், செல்வி ஆர். தயாவினி, எம். ஜெயகணேஸ். எஸ் ஜெயகுமார், ஏ. ராமேஸ்வரன், எஸ். மங்களேஸ்வரன், ஈ. பி. நரேந்திரன், பி. ஜெயகுமார், செல்வி சி. தர்மினி, கே. சிவசோதி. (இ-5)

# மாங்குளம் தாக்குதல் வெற்றியால் இந்திய அரசியலிலும் தாக்கம்

## வல்வைக் கூட்டத்தில் அன்ரன் பாலசிங்கம்

வல்வெட்டித்துறை, டிச. 24

மாங்குளம் தாக்குதல் வெற்றியால் ஸ்ரீலங்கா அரசியலில் மட்டும் அல்ல, இந்திய - தமிழக அரசியல்களிலும் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

நேற்று முன்தினம் மாலை வல்வை நெடியகாட்டில் நடைபெற்ற மாங்குளம் முகாம் தகர்ப்பு ஒரு மாத நிறைவுவெற்றி விழா — கரும்புலி லெப். கேணல் போர்க் நினைவு நாள் தொடர்பான கூட்டத்தில் திரு. அன்ரன் பாலசிங்கம் உரையாற்றினார்.

அவர் மேலும் பேசியதாவது;-

உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக பிரபாகரன் விளங்குகின்றார்.

''உனது மக்களின் விடுதலைக்காக நீ ஆற்றிவரும் தியாகமும் காட்டிவரும் வீரமும் ஈடிணையற்றவை. நீ வரலாற்று நாயகனாக விளங்குவாய்'' என்று முன்பொரு தடவை மக்கள் திலகம் எம். ஜி. ஆர். பிரபாகரனை வாழ்த்தினார். அவரது தீர்க்க தரிசனம் மிக்க வார்த்தை இன்று பலித்து விட்டது.

எம். ஜி. ஆரை நாம் சந்தித்த நாள் முதல் அவர் உயிர் வாழ்ந்த காலம் வரை நாம் எதிர்பார்த்ததை விட அதிகமாகவே அவர் எமக்கு உதவி புரிந்து கொண்டிருந்தார்.

அப்போது ராஜீவ்காந்தி அரசு எம்மீது எம். ஜி. ஆர். அரசு மூலம் பல தடவைகளில் அழுத்தங்களைப் பிரயோகிக்க முனைந்தது. ஆனால் எந்த ஒரு சந்தாப்பத்திலும் எம். ஜி. ஆர். அதற்கு இடம்கொடுக்கவேயில்லை.

கிழக்கு மாகாணத்தை மூன்றாகப் பிரித்து திருமலையைச் சிங்களவரிடமும், அம்பாறையை முஸ்லிம்களிடமும், மட்டக்களப்பைத் தமிழரிடமும் ஒப்படைக்கும் ஒரு யோசனையை ராஜீவ் அரசு ஒரு முறை முன் வைத்தது.

அச்சந்தர்ப்பத்தில் எம். ஜி. ஆர். எங்களை அழைத்தார். பிரபாகரனும் நானும் சென்றோம். அப்போது அவரது அமைச்சர்கள் பலரும் கூட இருந்தார்கள். கிழக்கு மாகாணத்தை மூன்றாகப் பிரிப்பது பற்றிய எங்கள் அபிப்பிராயத்தை எம். ஜி. ஆர். கேட்டார். நாங்கள் நிலைமையைத் தெளிவாக அவருக்கு எடுத்துக் கூறினோம்.

அப்போது எம். ஜி ஆர். தனது அமைச்சர்களிடம் மலையகத்திலும் தமிழர்கள் இருக்கிறார்கள் தானே என்றார். அவர்கள் ஆம் என்றார்கள். கொழும்பிலும் தமிழர்கள் இருக்கிறார்கள்தானே என்றார்; அதற்கும் அவர்கள் ஆம் என்றார்கள். அப்போது அமைச்சர்களைப் பார்த்து 'முழு இலங்கையையும் புலிகளிடம் கொடுத்து விடும்படி ராஜீவிடம் கூறுங்கள்' என்று கூறினார்.

### தந்தை — மகன் போன்ற தொடர்பு

எம். ஜி. ஆர். ஈழத்தமிழர் மீது உண்மையிலேயே அன்பும், அனுதாபமும் கொண்டிருந்தார். எம். ஜி. ஆருக்கும், பிரபாகரனுக்கும் இடையில் தந்தைக்கும் மகனுக்குமிடையே உள்ளது போன்ற தொடர்பிருந்தது.

ஆனால் இன்று தஞ்சம் என்று தமிழகம் சென்றவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். இது நம்பிக்கைத் துரோகம் ஆகும்.

தமிழ் நாட்டில் மதுரை மாவட்டம் மற்றும் பல மாவட்டங்களில் எல்லாம் இன்று பிரபாகரன் மாவீரனாக போற்றப்படுகிறார்.

மாங்குள முகாமை விடுதலைப்புலிகள் வெற்றிகரமாகத் தகர்த்ததன் மூலம்ஆனையிறவு முதல் வவுனியா வரையிலான பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளார்கள். இதனால் தமிழீழத்துக்கான அத்திவாரம் இடப்பட்டுள்ளது.

தமிழீழத் தாயகத்தை மீட்டெடுக்கும் பணியிலே- தலைவர் பிரபாகரனின் வழிகாட்டலிலே—மாங்குளமுகாமைத் தகர்த்து சரித்திரம் படைத்த லெப், கேணல் போர்க்கிற்கும் மற்றும் வீரவேங்கைகள் அனைவருக்கும் வணக்கம் செலுத்துகின்றேன்.

இப்படி அவர் கூறினார்.

வடமராட்சி அரசியல் பொறுப்பாளர் நகுலேலன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களான தினேஷ், வரதன் ஆகியோரும் உரையாற்றினர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வடமராட்சி அமைப்பாளர் அரசண்ணா நன்றியுரை கூறினார்.

கூட்ட முடிவில் நடன, நாடக நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. [இ-160]

## சனிக்கிழமை காலைவேளை ரியூட்டரிகள் இயங்கமாட்டா

யாழ்ப்பாணம், டிச. 24

பாடசாலைகள்சனிக்கிழமைகளில் இயங்கும் போதுகாலை 7.30 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை தனியார் கல்வி நிறுவனங்கள் (ரியூட்டரிகள்) வகுப்புகளை நடத்தக் கூடாது.

இவ்வாறு தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமைகளில் பாடசாலை நடைபெறும் சந்தர்ப்பங்களில், தனியார் கல்வி நிறுவனங்களும் நடந்து வந்ததால் மாணவர்கள் பலர் பாடசாலைகளுக்குச் செல்லாது தனியார் நிறுவனங்களுக்குச் சென்று வந்தனர்.

மேற்படி விடயம் தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதனை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதே சமயம்—

திங்கட்கிழமைகளிலும் வகுப்புகளை நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமைகளில் பகல் நேர வகுப்புக்களைத் தவிர வேறு எந்த வகுப்புக்களையும் நடத்தக்கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென் தமிழீழ மக்களுக்கு நிவாரணம் வழங்கும் படிவம் பெறாத தனியார் கல்வி நிறுவனங்கள் உடனடியாக அதனைப் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 28ஆம் திகதி பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரை நல்லூர் பங்கையற்கரசி [illegible] ஒப்படைக்குமாறும் அந்த அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது. (அ-6)

## கைலாசபதியின் வரலாறு நூல்வடிவம் பெறவேண்டும்

### நினைவு தினக் கூட்டத்தில் நந்தி

யாழ்ப்பாணம், டிச. 24

அமரர் பேராசிரியர் கைலாசபதியின் வாழ்க்கை வரலாறு நூல் வடிவம் பெற வேண்டும்.

கம்பன்கோட்டத்தில் நடந்த அமரர் கைலாசபதியின் எட்டாவது நினைவுக் கூட்டத்தில் தலைமையுரை ஆற்றிய பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி) இந்த வேண்டுகோளை விடுத்தார்.

''மல்லிகைப் பந்தல்'' அமைப்பு ஏற்பாடு செய்திருந்த இந்த நினைவுக் கூட்டத்தை முதுபெரும் எழுத்தாளர் வரதர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

அவரை அடுத்து டொமினிக் ஜீவா வரவேற்புரையையும், பேராசிரியர் சிவஞானசுந்தரம் தலைமை உரையையும் நிகழ்த்தினர்.

கவிஞர் இ. முருகையன் கைலாசபதி நினைவுச் சொற்பொழிவை ஆற்றினார்.

பேராசிரியர் கைலாசபதியின் மாணவன் விரிவுரையாளர் சிவலிங்கராசாவும் உரையாற்றினார்.

அமரர் கைலாசபதியின் வாழ்க்கை வரலாற்றை விரைவில் நூலாக [illegible] என்ற கோரிக்கை [illegible] ராலும் ஏற்றுக்கொள்ளப் பட்டது. (ஒ-6)

## உலகச் செய்திகள்

### பிலிப்பீன்ஸ் சதி முயற்சிமுறியடிப்பு

பிலிப்பீன்ஸில் ஜனாதிபதி கொரஸோன் அக்கூனோவை பதவி கவிழ்க்கும் சதி முயற்சி ஒன்று முறியடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

விமானத் தளம் ஒன்றை தாக்க எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இச் சதி முயற்சி கண்டுபிடிக்கப்பட்டது.

திருமதி கொரஸோன் அக்கூனோ ஜனாதிபதி பதவி ஏற்ற பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஏழாவது சதி முயற்சி இது என்று அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

### யுத்தம் தவிர்க்க முடியாதது என்கிறது அமெரிக்கா

வாஷிங்டன், டிச. 24

குவைத் நெருக்கடி தொடர்பாக ஈராக் மீது போர் தொடுப்பது தவிர்க்கமுடியாத ஒன்றாக மாறிவருகிறது.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் முன்கண்டவாறு சொன்னார்.

வளைகுடா நெருக்கடிக்கு அமைதித்தீர்வு காணலாம் என்ற நம்பிக்கை அருகி வருகிறது. என்றும் திரு. பேக்கர் சொன்னார். [இ-எ]

### எயிட்ஸ் நோய் மருந்து

எய்ட்ஸ் நோய்க்கு தடுப்பு மருந்து ஒன்றைத் தயாரிக்கும் முயற்சியில் பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறார்கள் என்று பி.பி.சி அறிவித்தது.

அவர்கள் கண்டுபிடித்த தடுப்பு மருந்து குரங்குகளில் பரிசோதனை செய்து பார்க்கப்பட்டது

குரங்குகளுக்கு எய்ட்ஸ் நோய் ஏற்படுவதை இந்த மருந்து பூரணமாக தடுப்பது அப்போது தெரியவந்தது என்று பி பி.சி. அறிவித்தது.

இம்மருந்து இன்னமும் மனிதர்களில் பரிசோதனை செய்து பார்க்கப்படவில்லை என்றும் அச்செய்தியில் கூறப்பட்டது. [உ-எ]

## படையினர் துப்பாக்கிச் சூடு

புளியங்கூடல் டிச. 24

காரைநகர் கடற்படையினர் குடிமக்கள் வாழும் கருவில் கரையோரப் பகுதியை நோக்கி அடிக்கடி துப்பாக்கிப் பிரயோகம் செய்கின்றனர் இதனால் இப்பகுதியில் பதற்றம் நிலவி வருகிறது. (இ-125)

## பாவை என்றால்...?

பாவை என்பது கண்ணின் உள்ள கருமணியில் சுடர்விடும் ஓர் ஒளிப்படலம்; கண்ணில் இப்பாவை இல்லாது விட்டால் பார்வையில் பயன் இருக்காது.

கண்ணே! கண்ணில் கருமணியே மணியாடுபாவாய் என்று ஆண்டவனைத் தேவாரம் விழித்துரைக்கிறது.

இறைவன் நமக்குக் கண்ணாகவும் கண்ணினுற்ற கருமணியாகவும் விளக்குவதோடு அக்கருமணியில் சுடர்விடும் பாவையாகவும் பொலிகிறான். கண்ணிற் பாவை போன்ற திருவெம்பாவையை பெண்பாவைகள் பாடுவார்கள்.

இப்பாவைப் பாடல்கள் இருபதாகும்; இருபது பாடல்களில் முதற்பத்தும் துயில் உணர்த்துவனவாயும், பின்பத்தும் அருள் நீராடுவனவாகவும் அமைக்கப்பட்டுள்ளன.

முன்னதாகப் பாடப்படும் எட்டுப்பாடல்கள் பாவைகளை எழுப்பும் தொனிப்புடையன. அடுத்துவரும் இரண்டு பாடல்களும் விழித்தெழுந்தவர்கள் குழுமி நின்று இறைவனை வணங்கி வேண்டுகோள் விடுவதாகும்.

பத்தாம் பாட்டிலே கோயிலில் உள்ள பெண்களுடன் நீராடச் செல்வோர் உரையாடுவதும் தெரிகிறது. பின்னால் அமைந்த பத்துப் பாடல்களும் குளிக்கும் பாடல்களே. இவற்றிலே மங்கை பங்கனான சிவனின் அருட்குளத்தில் அமிழ்ந்து முழுகி

### திருவெம்பாவை சிறப்பம்சம்

நீராடுவது கூறப்படுகிறது: கடைசி இரண்டு பாடல்களில் நீராடியவர்கள் கூடி நின்று இறைவனை வழிபடும் காட்சியும் தெரிகிறது. வேண்டுகோளாயும் பரம்பொருளின் ஐந்தொழில்களையும் போற்றுவனவாயும் உள்ளன.

இறைவன் அருளொன்றே வேண்டப்படுவது; அவனருளைப் பொருளாகத்தேவையானவையே திருவெம்பாவையில் கருத்தில் எடுக்கப்பட்டமை நோக்கற்பாலதாகும்.

புலவர்
ஈழத்துச்சிவானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) "மண்டேலா ரேடர்" இல. 250 A, பருத்தித்துறை வீதி, நல்லூர். 'அரஸ் ஜுவுளியகம்' 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம். (15000)

### சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாக தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள், 'சக்தி சரவணா' 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக]. தினசரி பகல் 9 மணி தொடக்கம் 1 மணிவரை சந்திக்கலாம். ஞாயிறு விடுமுறை. (15153

### நியூ விக்ரேஸ்

மேற்படி ஸ்தாபனத்திற்கு எலக்ரோனிக் மணிக்கூடுகள் திருத்துவதற்குதேர்ச்சிபெற்றவர்கள் உடனடியாகத்தேவை தொடர்பு கொள்ளவும்! நியூ விக்ரேஸ் B. M.C. ஒழுங்கை, தேவா வீதி, யாழ்ப்பாணம். [சி/5558]

### தவறிவிட்டது

19 - 12 - 90 புதனகிழமை புகையிரதவண்டியில் வந்து வவுனியாவிலிருந்து வந்த பெண்களுக்கூடாக வந்து கொண்டிருந்த ஆசிரியையின் கைப்பை நிறக்கரை போட்ட கைப்படியும், நீல நிறத்துணியிலான "நவலங்பாவ" ஐப பெற்றவர் அல்லது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து வவுனியா புகையிரத நிலையத்தில் தொழில் புரியும் ஸ்ரீ என்பவரிடம் அல்லது உதயன் பணிமனையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [14868]

### கோழி இறைச்சி

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு கோழி இறைச்சி விற்கப்படும். நல்லூர் பரமசேனரா 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தை, நல்லூர். (15267)

### உடன் தேவை

பெண்கள் குழந்தைகள் ஆகியோரது சகல உடைகளையும் நாகரீகமான முறையில் வெட்டி தைக்கக்கூடிய அனுபவம் வாய்ந்த பெண் தேவை. நேரில் வரவும். 'இருமைகள் ரேடர்ஸ்' (கல்வியங்காடு சந்தை அருகே உள்ள பெற்றோல் செட்டமுன்) கல்வியங்காடு. (15185)

### லீலா காமன்ஸ்

"லீலா காமன்ஸ்" பெண்களின் நவநாகரீக ஆடைகள் ஓடருக்குத் தைத்துக் கொடுக்கப்படும். (குறிப்பு) பெண்கள் "மிஸவலஸ்" ஸ்தாபனத்தில் பணிபுரிந்த அனுபவமுடையாக்ளை புதிய இடத்தில் கடமையாற்றுகிறார்கள் என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். லீலாசம "லீலா காமன்ஸ்", இல. 220, கஸ்தூரியார் வீதி, (யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம். [15269]

### வேண்டுகோள்

கமலினி கதிர்காமத்தம்பி என்பவரது முக்கியமான File ஒன்று பூந்தோட்டப் பகுதியில் வேறு ஒருவரின் Bag - இல் தவறுதலாக வைக்கப்பட்டுவிட்டது. கிடைத்தவர் T. பாலா டிஸ்பென்சரி லேன், புன்னாலைக்கட்டுவன் என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும். அல்லது உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். [15260]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பித்தல்

1990 மே, ஜூன் இறுதிப்பரீட்சை எழுதிய மாணவர்கள் ஆய்வுக் கட்டுரைகளை யாழ்ப்பாண வளாகத்தில் சமர்ப்பிக்க முடியாதிருப்பின், அவைகளை கொழும்பிலுள்ள பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அலுவலகத்தில் 1991 பெப்ரவரி 15 ஆம் திகதிக்கு முன்னராக சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். இவ்வாறு சமர்ப்பிக்கப்படும் கட்டுரைகள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு எடுத்து வருவதற்கான ஒழுங்குகள் செய்யப்படும்.

-பதிவாளர்.

(சி/5557)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### தேவராசா தேவநேசன்

(நேசன்)

மண்ணில்:
16 - 03 - 1960
விண்ணில்:
15 - 12 - 1989

அலைகடல் ஓய்ந்தாலும் உன் பிரிவால் வாடும் நெஞ்சங்களின் துயர் ஓயாது.

மனைவி, மகன்,
தாய், தந்தை,
சகோதரர்கள்,
உறவினர்கள்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

[15265]

## அரசாங்க அறிவித்தல்

### சுகாதாரத் திணைக்களம்

யாழ்ப்பாணம் பெரும்பாகம்

1991ஆம் ஆண்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கும் தெல்லிப்பழை, சாவகச்சேரி, கிளிநொச்சி, ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, நெடுந்தீவு ஆகிய மாவட்ட வைத்தியசாலைகளுக்கும் அழுக்குத் துணி சலவை செய்வதற்கான கேள்விகள் 1991 ஆம் ஆண்டு ஜனவரி 10ஆம் திகதி (10 - 01 - 91) முற்பகல் 10 மணிவரை சுகாதார சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம் அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விவரங்கள் அறிய விரும்புவோர் இக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

டாக்டர் ந. கனகசபை,
சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர்,
(சி-5554) யாழ்ப்பாணம்.

மாணவர்களின் வசதியை முன்னிட்டு

மீண்டும் .....

## மாலை நேர வகுப்புக்கள்
## எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்

இருபாலை.

✶ டிசம்பர் 25 ஆம் திகதி காலை 8; 30 மணிக்கு மாலை நேர வகுப்பில் கல்வி கற்ற அனைத்து மாணவர்களையும் சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

[15266] -அதிபர்.

## தேவை

### பண்ணைப் பொறுப்பாளர்

பிரபல நிறுவனமொன்றினால் நிறுவப்படவிருக்கும் விவசாய பண்ணைகளுக்கு பொறுப்பாக செயல்பட, விவசாய பட்டதாரிகள் தேவை. குடாநாட்டிலும், வெளிமாவட்டங்களிலும் பணியாற்ற ஆயத்தமாக இருக்க வேண்டும். தகுதியுள்ளவர்கள் தங்கள் சுய விபரக் கோவையுடன் 31 - 12 - 90க்கு முன் விண்ணப்பிக்கவும்.

இல. 162,
C/o, உதயன், யாழ்ப்பாணம்.

[15262]

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 03 — 09 — 1936



உதிர்வு: 24 — 12 — 1989

திருமதி

### யோசேப்பின் மேரி கிரேஸ் அன்புராஜா

[ஆசிரியை - யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்]

நத்தார்த் தினமதிலே நாம் மகிழும் வேளையிலே
நித்திய வாழ்வுக்குன்னை மாபரன் அழைத்தாரோ
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் இந் நாளில்
முத்தான உன் நினைவு
எம்மனம் விட்டகன்றிடுமோ?
மறக்க முடியவில்லை அன்று முதல்
துறக்க முடியவில்லை உம் நினைவை
பறக்க முடியவில்லை உம்மைத் தேடி
சிறக்க முடியவில்லை நீரின்றி

யாழ். மரி அன்னை பேராலயத்தில் 24 - 12 - 90 திங்கட்கிழமை காலை 6.15 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள், தாய்,
சகோதரர், சகோதரிகள்.

33/1... வீதி,
யாழ்ப்பாணம். [15158]

## கிளிநொச்சி மாவட்டத்தில் 16 ஆசிரியர்களே ஓய்வு

கிளிநொச்சி மாவட்டத்தில் 16 ஆசிரியர்களே இளைப்பாறும் திட்டத்தின் கீழ் இளைப்பாறுவதற்காக விண்ணப்பங்களை கல்வித் திணைக்களத்தில் சமர்ப்பித்துள்ளனர்.

ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது இங்கு இளைப்பாறுவோர் எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளது.

16 ஆசிரியர்களிலும் அனேகமானோர் சேவை நீடிப்பு திட்டத்தின் கீழ் பணிபுரிந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-76)

## கஜூ விற்பனை

எம்மிடம் கஜூ மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்!

தொடர்புகள்:-

மொத்த விற்பனைக் களஞ்சியம்
கிராமசபை அலுவலகம் முன்பாக
ஆடியபாதம் வீதி,
கொக்குவில்.

[15261]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 11 — 01 — 1911



உதிர்வு: 24 — 11 — 1990

### திருமதி அற்புதரட்ணம் எமிலி பூரணம்

உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'தேவி வாசா'
உடுவில் வடக்கு,
சுன்னாகம்.

[15270]

## 6 ஆம் மாத நினைவஞ்சலி

### தம்பிப்பிள்ளை கணேசன்



மலர்வு: 01- 08- 1933
உதிர்வு: 27- 06- 1990
திதி: 24- 12- 1990

மாதங்கள் ஆறு
காற்றினில் கலந்தன
ஆயினும் உம்நினைவுகள்
நெஞ்சினுள் உள்ளன.
மாசில்லாத முகமும்
கள்ளமில்லா உள்ளமும்

பாசத்தோடு எம்மை
அணைத்திடும் குணமும்
வஞ்சனை இல்லாது
நீர் வாழ்ந்திட்ட வாழ்வும்
எங்கள் நெஞ்சினை விட்டு
அகலாது.

பிரிவால் துயருறும்:
தாய், சகோதரிகள். சகோதரன்,
மைத்துனன், மைத்துனி, மருமக்கள்,
பேறாமக்கள்.

192, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். [15254]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 24 - 12 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org